# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

*[1991, ஆகஸ்ட் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1991, ஓகத்து மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : ரூபா 1.00

## 1991 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்.

[1991, ஆகஸ்ட் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ 37/90

### 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால், பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1அ) அமைச்சரானவர், ஒழுங்குவிதி மூலம், அத்தகைய ஒழுங்கு விதியில் காட்டப்பட்டுள்ளவாறு (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ பதவி வகிக்கின்ற) அலுவலர்கள், முறையே இலங்கைக் குடியரசுக்கான அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கான பதவிவழி சமாதான நீதிவான்களாதல் வேண்டுமென்று குறித்துரைக்கலாம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.

(1) "இலங்கையின் பாகங்களுக்கான சமாதான நீதிவான்கள்" என்னும் தலைப்பின் கீழ் காணப்படும் "மாநகரசபையின் எல்லா உறுப்பினர்களும், நகரசபைகளின் எல்லா உறுப்பினர்களும் அவரவரது மாநகர சபையினதும், நகரசபையினதும் இடப்பரப்புகளுக்கான சமாதான நீதிவான்களாக இருப்பர்," என்னும் விடயத்திற்கு நேர் முன்னர், பின்வரும் புதிய விடயத்தைப் புகுத்துவதன்மூலம்:—

"மாநகரசபைகளின் எல்லா உறுப்பினர்களும், அத்தகைய சபைகள் எம்மாகாணங்களுக்காகத் தாபிக்கப்பட்டனவோ அம் மாகாணங்களுக்கான சமாதான நீதிவான்களாக இருப்பர்.".

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.